வளன் ஆய்வு
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சங்க இலக்கியங்களில் கவனச் சிதறல்

***கு . அந்தோணி ராஜா,*** *உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி -02.*

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்வில் கவனம் என்பது மிகவும் முக்கியமானதாகும். மனிதன் தான் செய்கின்ற செயல்களில் கவனம் இல்லை என்றால் வாழ்வியல் பிறழ்வுகள் ஏற்படக்கூடும். சங்க இலக்கியங்களில் கவனச்சிதறல் என்னும் பொருண்மையில் அமைந்த இவ்வாய்வில் கவனம் என்பதன் விளக்கம், கவனத்திற்கான காரணிகள், கவனச் சிதறல் என்பன் விளக்கம், கவனச்சிதறலுக்கான காரணிகள் போன்றவை ஆராயப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கதைமாந்தர்களின் கூற்று அடிப்படையில் அவர்களின் கவனச்சிதறல்களை ஆராய்கின்றது.

**கலைச்சொல்லாக்கம்**

கவனம் - மனம் ஒரு நிலைப்படுதல், கவனச்சிதறல் – மனம் ஒரு நிலையில் இல்லாமை, அவலம் – துன்பம், பிணி – நோய், துஞ்சும் – உறக்கம், துஞ்சிலேன் – உறக்கமின்மை.

**முன்னுரை**

சங்க இலக்கியம் மனிதனின் பண்புகளை எடுத்துரைக்கின்றன. மனிதனின் செயல்பாடுகளை அறிந்துகொள்வதற்கு அகம், புறம் என்று இருவேறு பாகுபாடுகள் இலக்கியங்களில் இடம் பெற்றள்ளன. இவற்றில் தலைவன், தலைவி கூற்றுகளில் இருவரும் தங்களைத் தாங்களே மறந்தநிலையில் உள்ள பாடல்கள் அதிகம் புனையப்பட்டுள்ளன. அப்பாடல்கள் நெஞ்சோடுகிளத்தல், செலவழுங்கல் துறையில் அமைந்த பாடல்கள் பெரும்பாலும் இருவரின் கவனம் மாறி கவனக்குலைவாகவும் கவனச்சிதறிப்போய் உள்ளதை வெளிக்கொணரும் விதமாக இக்கட்டுரையானது ஆராய்கின்றது.

**கவனச்சிதறல்**

கவனக் குலைவு அல்லது **கவனச்சிதறல்** (Distraction) என்பது “ஒரு தனிநபரின் அல்லது குழுவின் கவனத்தை விரும்பிய இடத்திலிருந்து திசைதிருப்புவதன் மூலம் விரும்பிய தகவலின் வரவேற்பைத் தடுக்கும் அல்லது குறைக்கும் செயல்முறையாகும்”[1].

. கவனம் செலுத்தும் திறன் இல்லாமை, கவனம் செலுத்தும் பொருளில் ஆர்வமின்மை, அல்லது கவனம் செலுத்தும் பொருளை விட வேறு ஏதேனும் பொருளில் மிகுந்த தீவிரம், புதுமை அல்லது கவர்ச்சி ஆகியன கவனச் சிதறல் ஏற்படக் காரணமாக அமைகின்றன. கவனச்சிதறல்கள் வெளிப்புற மூலங்கள் மற்றும் உள் மூலங்கள் இரண்டிலிருந்தும் ஏற்படுகின்றன.

**வெளிப்புற கவனச்சிதறல்கள்**

வெளிப்புற கவனச்சிதறல்களில் காட்சி தூண்டுதல்கள், **“சமூக தொடர்புகள், இசை, குறுஞ்செய்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகள்”**[2] போன்ற காரணிகள் அடங்கும்.

**உள்புற கவன்சிதறல்கள்**

உள்புற கவனச்சிதறல்களில் **“பசி, சோர்வு, நோய், கவலை, பகல் கனவு”**[3] போன்ற காரணிகள் அடங்கும். வெளிப்புற மற்றும் உள் கவனச்சிதறல்கள் கவனம் தடைபடுவதில் பங்களிக்கின்றன.

**சங்க இலக்கியப்பாடல்களில் கவனச்சிதறல்**

சங்க இலக்கியப் பாடல்கள் தமிழ் மொழியின் சிறப்பையும் பெருமையும் உணர்த்துவதாக அமைந்துள்ளன. இப்பாடல்கள் மூலம் மனிதனுக்கு ஏற்படக்கூடிய கவனச்சிதறல்களை காணமுடிகின்றன. பண்டைய புலவர்கள் எழுதிய பாடல்களில் தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரையும் மையப்படுத்திய பாடல்களில் தலைவனும், தலைவியும் காதல் வயப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் தங்களுடைய கவனத்தை இழந்து தவிக்கும் நிலையை எடுத்துரைக்கின்றன. கலித்தொகைப் பாடல் ஒன்றில்,

***“என்நெஞ்சம் என்னோடு நில்லாமை நனிவெளவி”*** [4] ***(கலி.138)***

என்னும் பாடல் வரிகள் தலைவனின் மனநிலையை எடுத்துரைக்கின்றது. தலைவியின் நினைப்பில் இருக்கின்ற தலைவனின் உள்ளம் அவன் நெஞ்சம் அவனிடம் இல்லாத

*நிலையை குறிக்கின்றது. தலைவனின் அகத்தில் ஏற்பட்ட கவனச்சிதறல்களால் எந்த ஓர் செயலும் நிகழாமல் இருப்பதைக் காணமுடிகின்றன.*

*தலைவன் தலைவியே அடைந்தே தீருவேன் என்னும் மனநிலையில் இருப்பதால், தலைவியை அடைய வழிதேடுகின்றான். அவ்வழி கிடைக்காதபொழுது தற்கொலை முயற்சியை மேற்கொள்ள முற்படுகின்றான். இதனால் தலைவன் அகத்தில் ஏற்பட்ட மன அழுத்தின் விளைவாகவே அவனுடைய கவனம் சிர்குலைந்திருப்பதைக் காணமுடிகின்றது.*

***"பின்னிலை முனியல் மா நெஞ்சே என்னதூஉம்***

***அருந்துயர் அவலந் தீர்க்கும்***

***மருந்துபிறிது இல்லையான் உற்ற நோய்க்கே"*** [5] ***(நற். 140)***

*என்னும் பாடல் தலைவனின் தவிப்பை வெளிப்படுத்துகின்றது. தலைவன் உரைக்கும் பொழுது அந்த இளைய மகள் என் துன்பத்தைப் போக்கும் மருந்தாக இருக்கக் கூடியவள் எனக்கு அருள் செய்ய மறுக்கிறாள். அவளைத் தவிர வேறொரு மருந்தும் எனக்கில்லை. தலைவி மீது தலைவனுக்கு ஏற்பட்டுள்ள காமநோய் அதிக துன்பத்தினை ஏற்படுத்துகின்றது. அதனை நினைத்து வருந்தும் தலைவனின் செயல்பாடுகளில் தடுமாற்றம் ஏற்படுவதை அறியமுடிகின்றது. தலைவியின் மீதுள்ள அன்பால் தலைவனுக்கு அகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் பறத்தில் அவனுடைய கவனம் சிதைந்திருப்பதை நற்றிணைப்பாடல் மூலம் அறிய முடிகின்றன.*

***"சேர்பினுஞ் செல்லா யாயினு நல்லதற்***

***கரியை வாழியென் னெஞ்சே பொருளே"*** [6] ***(நற்.105)***

*என்னும் பாடல் வரிகளில் தலைவன் திருமணம் முடிந்த பிறகு இல்லற வாழ்க்கைக்குத் தேவையான பொருளைத் தேடச்செல்கின்றான். அப்போது தலைவனுக்குத் தலைவியோடு கூடியிருந்த இன்ப நுகர்ச்சியான வாழ்க்கை நினைவுக்கு வருகின்றது. அதனால் தலைவன் தன் நெஞ்சிற்குள் உரையாடுகின்றான். தலைவின் நினைப்பில் இருக்கின்ற தலைவன் பொருள் தேடச் செல்லாமல் இருப்பதே என்று தீர்க்கமான முடிவை எடுத்துவிடுகின்றான். தலைவியை விட்டுப்பொருள் தேடச்செல்ல வேண்டி தருணம் வந்ததும் தலைவன் பொருள் தேடச் செல்லாமல் தான் மேற்கொண்ட செயலை பாதியிலேயே விடுவது கவனக்குலைவு, கவனச் சிதறலாகும்.*

***"நில்லாப் பொருட்பிணிச் சேறி***

***வல்லே நெஞ்சம் வாய்க்க நின் வினையே"*** [7] ***(நற். 126)***

என்னும் பாடல் வரிகள் மூலம் தலைவன் தன் நெஞ்சிடம் வினவுகின்றான். தேடிக்கிடைக்கப் பெற்ற பொருளின் காரணமாக நல்ல வளமை பெற்றிருந்தாலும் அது சிறந்ததன்று, ஆனால் காம இன்பம் இளமையில் மட்டுமே அனுபவிக்க முடியும் முதுமையில் நுகரமுடியாது என்று எடுத்துரைக்கின்றான்.

நெஞ்சே இவற்றை எல்லாம் ஆராயாத உனக்குப் பொருளாசை மிகுந்திருந்ததால் காமநுகர்ச்சியைக் கைவிட்டுச் செல்ல நினைக்கின்றாய் இது உனக்குத் தகுமோ என்று கூறிப் பொருள் தேடும் பயணத்தைத் தவிர்க்கின்றான். இங்குத் தலைவன் நெஞ்சில் தலைவி தந்த காமவின்பத்திற்கும் பொருள் தேடும் ஆசைக்கும் இடையே நடைபெறுகின்ற மனப்போராட்தின் விளைவாக தலைவனுக்குக் கவனச் சிதறல் ஏற்படுவதைக் காணமுடிகின்றது.

**“நோகோ யானே நோம்என் நெஞ்சே”**[8] *(நற்.312)*

என்னும் பாடலின் மூலம் தலைவனின் நிலையை கழார்க்கீரன் எயிற்றியார் புலவர் குறிப்பிடுகையில் பொருள் தேடிச் செல்லும் நினைப்பில் தலைவன் இருக்கின்றான். அப்பொழுது தலைவன் நெஞ்சினை நோக்கி நான் பிரிந்து சென்றால் தலைவி நான்கு பருவ காலங்களிலும் என்ன பாடுபடுவாளோ? என்று தலைவியின் நிலையை எண்ணிப் பொருள் தேடச் செல்வதா வேண்டாமா என்ற இரு வேறு மனநிலையில் காணப்படுகின்றான். இருவேறு மனநிலையில் இருகின்ற தலைவனின் மனதில் கவனம் சிதறி இருப்பதைக் காணமுடிகின்றது.

**“மீன்கண் துஞ்சும் பொழுதும்**

**யான்கண் துஞ்சிலன் யாதுகொல் நிலையே”** [9] *(நற்.319)*

என்னும் பாடலில் தலைவின் மனநிலையை புலவர் எடுத்துரைக்கின்றார். தலைவி தான் காதல் கொண்ட தலைவனின் பிரிவால் வாடுகின்றாள். அப்போது அவள் தன் நெஞ்சோடு உரையாடுகின்ற பொழுது மீன் உறங்குகின்ற நள்ளிரவிலும் நான் மட்டும் உறங்காமல் இருக்கின்றேன் என்று தலைவி தனக்குத் தானே புலம்பிக்கொள்கின்றாள். தலைவியின் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தால் அவளுடைய கவனம் சிதைந்துபோய்யிருப்பதைக் காணமுடிகின்றது.

**“காலையும், பகலும்,கையறு மாலையும்,**

**ஊர்துஞ் சியாமமும், விடியலு, என்று இப்**

**பொழுது இடை தெரியிற்”**[10] *(குறுந்.32.)*

*என்னும் பாடல் சுட்டுகிறது. இப்பாடலில் குறிஞ்சி நிலத் தலைவி நள்ளிரவில் தூங்காமல் தவிக்கின்றாள். அனைவரும் தூங்கும் வேளையில் இவள் மட்டும் உள்புற கவனச்சிதறல்களால் தலைவி தன்னுடைய தூக்கத்தை இழந்து தவிக்கும் நிலையை புலவர் எடுத்துரைத்துள்ளார்.*

*தலைவன் தலைவியை விட்டு வேற்றூர் சென்றுவிட்டான். அப்போது தலைவி தன் தலைவன் இனனும் வரவில்லையே என்று ஏங்குகிறாள். இதனை அறிந்த தோழி தலைவனின் ஏக்கத்தை ஆற்றுப்படுத்தும் விதமாக அவன் குறித்த காலத்தில் வருவான் என்று தலைவிக்கு அறிவுறுத்துகிறாள். தோழியின் அறிவுறுத்தலையும் பொறுத்துக் கொள்ளாத தலைவி, தலைவனின் பிரிவை நினைந்து நினைந்து நொந்து கொள்கின்றாள்.; இதனை வெள்ளிவீதியார்*

**"உடைமதில் ஓரரண் போல**
**அஞ்சுவரு நோயொடு துஞ்சா தேனே"** [11] *(அகம்.45)*

*என்னும் பாடலில் பதிவாக்கியுள்ளார். தலைவி தோழியிடத்தில், "யான் ஆதி மந்தி போலக் காதலனைக் காணாமல் தவிக்கின்றேன். அத்தகைய துன்பத்தால் தவித்துக் கொண்டிருக்கின்றேன். நாட்டிற்கே அரணாக விளங்கக் கூடிய மதிற்சுவர்கள் போரின் போது சிதைத்துவிடுகின்றனர். இந்த அச்சத்தினால் அரணிடத்தே உள்ளோர் கண்கலங்கி அழிவதைப் போல யானும் அச்சம் பொருந்திய பிரிவு நோயின் காரணமாக உறக்கம் இல்லாதவளாக இருக்கின்றேன்" என்று உரைக்கிறாள். மனதில் ஏற்பட்ட ஆழ்ந்த மனஅழுத்தத்தின் விளைவாகத் தலைவி தூக்கமின்றி இருப்பதை இதனால் அறியமுடிகின்றது.*

*தலைவன் தலைவியை விடுத்துப் பரத்தையரை நாடிச் சென்று இல்லத்திற்குத் திரும்புகின்றான். இதனை அறிந்த தலைவி தலைவனை ஏற்க மறுக்கின்றாள். தலைவன் தலைவியிடம் பல முறை முயன்றும் தோற்றுவிடுகின்றான். ஆகையால் தலைவியின் தோழியும் இன்ன பிற வாயில்களின் உதவியை நாடிச் செல்கின்றான். அப்போது அவ்வாயில்களின் வற்புறுத்தலின்படியும் தன்னுடைய ஆற்றாமை மிகுதியாலும் தலைவனை ஏற்றுக்கொள்கின்றாள். சிறிது நாட்கள் கழித்துத் தலைவன் மீண்டும் பரத்தையோடு தொடர்பு வைத்துக் கொள்கின்றான். இதனை அறிந்த தலைவி பொறுமையிழந்தவளாய் காணப்படுகின்றாள். அதனை,*

**"துறைகே ழரன் கொடுமை நன்று**
**மாற்றுக தில்ல யாமே**
**தோற்க தில்ல வென்றட மென் றோளே"** [12] ***(ஐங்.12)***

தலைவன் (ஊரன்) எனக்கு அளிக்கும் கொடுமை மிக பெரியதாகவே இருக்கின்து. என் மனமே மிகவும் வேதனைகொள்கின்றது நான் என்ன செய்வேன் என்று நெஞ்சிடம் முறையிடுகின்றாள். தலைவன் செய்கின்ற தவறுகளைப் பொறுத்து ஏற்றுக் கொள்ளவே துணிகின்றேன். தலைவி உள்புற கவனச்சிதறல்களால் பாதிக்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

**தொகுப்புரை**

சங்க இலக்கியங்களில் கவனச் சிதறல் என்னும் பொருண்மையில் அமைந்த இக்கட்டுரையில் கவனச்சிதறல் என்பதற்கான விளக்கமும் கவனச்சிதறல்களை ஏற்படுத்தும் காரணிகளையும் அறிந்துகொள்ளமுடிகின்றன். கவனச் சிதறல்களில் உள்புறமூலங்கள், வெளிப்புற மூலங்கள் இவ்விரண்டிற்கும் இருக்கக் கூடிய காரணிகளையும் தெளிவாக அறிந்துகொள்ளமுடிகின்றன. சங்க இலக்கிய பாடல்களில் தலைவன், தலைவி தங்களுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தத்தின் விளைவாக அவர்களின் கவனம் மாறி, கவனக்குலைவு, கவனச்சிதறல் ஏற்பட்டுள்ளதை இக்கட்டுரையின் மூலமாக அறிந்துகொள்ளமுடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. கி. நாகராஜன், கல்வி உளவியல், ப.235.
2. www. ta.m.wikipedia.org பார்வை. 12.11.2022.
3. www. ta.m.wikipedia.org பார்வை 12.11.2022.
4. நச்சினார்க்கினியர் (உ.ஆ), கலித்தொகை, ப.139.
5. நாரயணசாமிப்பிள்ளை (உ.ஆ), நற்றிணை, ப.150
6. மேலது, ப.134.
7. மேலது, ப.173.
8. மேலது, ப.213.
9. மேலது, ப.301.
10. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ)., குறுந்தொகை., ப. 42.
11. ந.மு. வேங்கடசாமி (உ.ஆ) அகநானூறு., ப. 53.
12. பொ.வே. சோமசுந்தரனார் (உ.ஆ)., ஐங்குறுநூறு., ப.46.

துணை நூற்பட்டியல்


1. *சோமசுந்தரனார். பொ. வே (உ.ஆ).,* ***ஐங்குறுநூறு,*** *திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுஅச்சு -2008*
2. *சோமசுந்தரனார். பொ. வே (உ.ஆ).,* ***குறுந்தொகை,*** *திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுஅச்சு -2008*
3. ***நாகராஜன் கி.*** ***கல்விஉளவியல்,*** *இராம் பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு, 2007.*
4. ***நச்சினார்க்கினியர் (உ.ஆ),*** ***கலித்தொகை,*** *திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை, மறுஅச்சு,2009.*
5. ***நாராயணசாமி (உ.ஆ),*** ***நற்றிணை*** *திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை, மறுஅச்சு,2009.*
6. ***வேங்கட்சாமி நாட்டார் (உ.ஆ),*** ***அகநானூறு,*** *திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுஅச்சு, 2008.*
7. ***www. ta.m.wikipedia.org***